### அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் கலைஞர் கருணாநிதி பன்னாட்டு சமூக நீதி இருக்கை –

# உலக உன்னத மாமனிதர்களுக்கு கலைஞர் கருணாநிதி பன்னாட்டு சமூக நீதி - பொதுச் சேவை விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் – சென்னை வளர்ச்சிக் கழகம் கோரிக்கை!

சென்னை, மே 25-

சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் அவர்கள் முதலமைச்சர் அவர்கள் 22.05.2025 அன்று அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து அமெரிக்க பல்கலைக்கழகத்தில் கலைஞர் கருணாநிதி பன்னாட்டு சமூக நீதி இருக்கை மற்றும் உலக உன்னத மாமனிதர்களுக்கு கலைஞர் கருணா நிதி பன்னாட்டு சமூக நீதி மற்றும் பொது சேவை விருது வழங்குவது குறித்த கோரிக்கை வைத்தார்.

கலைஞர் அவர்களின் பல்வேறு திட்டங் களால் செயலால் தொடர் நடவ டிக்கையால் பணியால் சமூக நீதி பெரி தும் தமிழ்நாட்டில் நிலை நாட்டப்பட் டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு பல்வேறு நாடுகளில் அறிவார்ந்த கல் வியாளர்கள் கலைஞர் அவர்களின் பணியினை ஆராயவும் அதனை தங் களது நாடுகளுக்கு எடுத்துச் செல்ல வும் மேலும் சமூக நீதியினை உலகம் முழுவதும் நிலைநாட்ட சென்னை வளர்ச்சிக் கழகம் அமெரிக்காவில் உள்ள அட்லாண்டா நகரில் அமைந் துள்ள கென்சா பல்கலைக்கழகத்து டன் இணைந்து கலைஞர் கருணாநிதி பன்னாட்டு சமூக நீதி இருக்கையை நிறுவுவது என்றும் இதன் மூலமாக ஆராய்ச்சி, பயிற்சி பயிலரங்கம் கருத் தரங்கம் மாநாடு வெளியீடுகள் என கொண்டு வருவது என்றும் தீர்மானித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் நிதியாக அமெரிக்க மில்லியன் டாலர் நன் கொடையாக பல்கலைக்கழகத்திற்குப் பெற்று தருவதாகவும் சென்னை வளர்ச்சிக் கழகம் உறுதி கூறியுள்ளது. அதன் அடிப்படையில் முதலமைச்சர் அவர்களை 1 மில்லியன் அமெரிக்க டாலர் அரசின் சார்பிலோ பொது நன் கொடையின் மூலமாகவும் பல்கலைக் கழகத்திற்கு வழங்கிடவேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.

பெரியார் மணியம்மை பல்கலைக் கழகமும் சென்னை வளர்ச்சிக் கழக மும் இணைந்து கலைஞர் கருணா நிதி பன்னாட்டு சமூக நீதி மற்றும் பொது சேவை விருது ஒன்றினை உரு வாக்கிடவும் ஒவ்வொரு ஆண்டும் சமூக நீதி மற்றும் பொது சேவையில் சிறந்து விளங்கும் உன்னத மாமனி தர்களுக்கு இந்தியாவுக்கு வெளியில் தலைசிறந்த மாமனிதரைத் தேர்வு செய்து விருது வழங்குவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சி ஒவ்வொரு ஆண்டும் நேரு விருது வழங்குவது போல் இந்த விருது அமையும். இதன் துவக்கமாக 2020 விருது மொரிஷியஸ் முன்னாள் குடிய ரசுத் தலைவர் பரமசிவம் பிள்ளை வையாபுரி அவர்களும் 2021 விருது கயானா பிரதம அமைச்சர் வீராசாமி நாகமுத்து அவர்களுக்கு வழங்கப்பட் டது. இதன் தொடர்பாக பெரிய அள வில் விருது வழங்கிட தமிழ்நாடு அரசு நிதி உதவியாக வழங்கிட வேண்டும் அல்லது வருடாவருடம் அரசே விரு தினை வழங்க வேண்டும் அல்லது பொது வெளியில் நிதியினை வழங்கிட வேண்டும். இதனை பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் மற் றும் சென்னை வளர்ச்சிக் கழகம் மற் றும் தமிழ்நாடு அரசும் இணைந்து இந்த விருதினை நிர்வகிக்கும் இதற் கான நிதி உதவினை செய்ய உரிய ஆணை வழங்கிட முதலமைச்சரிடம் வேண்டுகோள் வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின்போது பெரியார் மணியம்மை பல்கலைக்கழக வேந் தர் தமிழர் தலைவர் டாக்டர்கி.வீர மணி அவர்கள் இந்த திட்டங்கள் குறித்து விவரித்தார்.

அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர்கள் ஆர்.எஸ்.பாரதி மற்றும் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடன் இருந்தனர். சென்னை வளர்ச் சிக் கழக பிரமுகர் களும் பலரும் வந் திருந்தனர்.

முதலமைச்சர் அவர்கள் இந்த இரு கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலிப் பதாக தெரிவித்தார்.

### கூட்டுறவு – பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு – கரும்பு வழங்கிய

# விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்கிட ரூ.97.77 கோடி நிதி ஒதுக்கீடு!

## அரசாணை பிறப்பிக்கப்பட்டது! அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் பெருமிதம்!

**சென்கூனை, மே 25-**

**கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலை களுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு நிலுவை யில் உள்ள கரும்பு கிரயத் தொகை வழங்குவதற்கு ரூ.97.77 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப் பட்டுள்ளது என சுற்றுலா மற் றும் சர்க்கரை துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தெரிவித் துள்ளார்.**

*அவரது அறிக்கை வரு மாறு:-*



*கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையி லான அரசு பல்வேறு திட் டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை கரும்பு விவசா யிகளின் மீது அக்கறை கொண்ட இவ்வரசு கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப் பதற்காகவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை அதிகரிக்கவும் பல்வேறு ஆக் கப்பூர்வமான நடவடிக்கை களை மேற்கொண்டு வருகி றது. அதன் ஒரு பகுதியாக கரும்பு விவசாயிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கி வருகின்றது.*

*முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2025-26 ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில், 2024-25 அரவைப்பருவத் தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயி களுக்கு முன்எப்போதும் இல்லாத அளவிற்கு, டன் ஒன்றுக்கு ரூ.349/ சிறப்பு ஊக்கத்தொகையாக வழங் கப்படும் என அறிவித்து, இத்திட்டத்தினை செயல்ப டுத்த ரூ.297/ கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.*

*முதலமைச்சர் அவர் களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன், ஒன்றிய அரசு நிர்ணயம் செய்த கரும்பு விலைக்கு மேல் சிறப்பு ஊக்கத்தொ கையாக 2020-21 அரவைப் பருவத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ.192.50/ எனவும், 2021-22 மற்றும் 2022-23 அரவைப் பருவங்களுக்கு ரூ.195/ என வும், 2023-24 அரவைப் பரு வத்திற்கு ரூ.215/எனவும் 2024-25 அரவைப் பருவத் திற்கு ரூ.349/ என வழங்கி கரும்பு விலை டன் ஒன் றுக்கு ரூ.2,750/லிருந்து ரூ.3,500/ என உயர்த்தப் பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக சிறப்பு ஊக் கத்தொகையாக 4,79,030 கரும்பு விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.848.16/கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2024-25 அரவைப் பருவத்திற்கு சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் விவ சாயிகளுக்கு சிறப்பு ஊக் கத்தொகை வழங்க ரூ.297/ கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரவைப் பருவம் நிறைவு பெற்றபின் கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் 6,09,030 கரும்பு விவசாயிகள் ரூபாய் 1,145.12 கோடி சிறப்பு ஊக் கத்தொகை பெற்று பயன டைய நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.*

*கரும்பு விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கரும்பு விவசாயி களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை விரைந்து வழங்கிட ஏது வாக எட்டு கூட்டுறவு சர்க் கரை ஆலைகளுக்கு ரூ.97.77 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார் கள். இத்தொகை சம்மந்தப் பட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூலம் தொடர்பு டைய விவசாயிகளின் வங் கிக் கணக்கிற்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும்.*

*முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றது முதல், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் வரலாற்றில் முதன் முறையாக கரும்பு விவசாயி களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை மற்றும் கரும்பு கிரயத் தொகையாக சுமார் ரூ.1,945.25 கோடி வழங்கப் பட்டுள்ளது. கரும்பு சாகுப டிப் பரப்பினை அதிகரிக்க வும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்த வும் அவர்களின் அறிவுறுத் தலுக்கிணங்க தமிழ்நாடு அரசால் தொடர் நடவடிக் கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.*

*கரும்பு விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி, அதிக பரப்ப ளவில் கரும்பு சாகுபடி மேற்கொண்டு, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க் கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு கரும்பு விவசா யிகளின் நலனுக்காகவும், சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்காகவும், சிறப்பு ஊக்கத்தொகை, மானியங் கள், கரும்பு கிரயத் தொகையை உரிய காலத் தில் வழங்க நிதி உதவி உள் ளிட்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வரும் முதலமைச்சர் அவர் களுக்கு கரும்பு விவசாயி களின் சார்பாக நெஞ் சார்ந்த நன்றியைத் தெரிவித் துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் குறிப்பிட் டுள்ளார்.*

### நாகாலாந்து ஆளுநர்

# இல.கணேசன் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!




புதுடெல்லி, மே 25 -

நாகாலாந்து ஆளுநர் இல.கணேசன் அவர்களை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்பு கொண்டு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:

80வது பிறந்தநாள் காணும், நாகாலாந்து ஆளுநர் இல. கணேசன் அவர்களை , நேற்று (24.05.2025) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

## வாட்ஸ் அப்பில் வலம் வருவது!




## வாட்ஸ் அப்பில் வலம் வருகிறது!

# தேச விரோதிகள், துரோகிகள் யார்?

## இந்தியப் பொருளாதார வீழ்ச்சிக்கு யார் காரணம்?

10, 000000000000 (பத்து லட்சம் கோடி..) பேங்கில் கடன் பெற்றுக் கொண்டு பண மோசடியில் ஈடுபட்டு, நாட்டை விட்டே ஓடிப்போன.. 28 பேரில்..

SC/ST/OBC .முஸ்லீம்கள். கிருத்தவர்கள் ஒருவர் கூட இல்லை..

முக்கியமாய் ஒரு தமிழனும் இல்லை..

நேர்மையாக உழைத்து சம்பாதித்து வங்கியில் போட்ட இந்தியர்களின் பணத்தை ஆட்டைய போட்ட 28 தொழிலதிபர்கள்..

1) விஜய் மல்லையா
2) மெஹுல்சோக்ஷி
3) நீரவ் மோடி
4) நிஷான் மோடி
5) புபேஷ் பெய்டியா
6) ஆஷிஷ்
7) சன்னி கல்லாரா
8) ஆர்த்தி கல்லாரா
9) சஞ்ஜய் கல்லாரா
10) வர்ஷா கல்லாரா
11) சுதீர் கல்லாரா
12) ஜித்தின் மேத்தா
13) உமேஷ் பாரீக்
14) கமலேஷ் பாரீக்
15) நிலேஷ் பாரீக்
16) வினய் மிட்டல்
17) ஏகலைவா கர்ஹ்
18) சேட்டன் ஜெயந்திலால்
19) நிதின் ஜெயந்திலால்
20) தீப்தி பென் சேட்டன்
21) சாவியா சேய்ட்
22) ராஜீவ் கோயல்
23) அல்கா கோயல்
24) லலித் மோடி
25) ரித்தீஷ் ஜெயின்
26) ஹித்தேஷ் நாஹேந்தபாய் படேல்
27) மயூரிபென் படேல்.
28) ஆஷிஷ் சுரேஷ் பாய்.

இவர்கள் வங்கியில் கடன் வாங்கி ஆட்டைய போட்டது ரொம்ப அதிகமில்லை, வெறும் பத்து லட்சம் கோடி மட்டும் தான்.

இதில் சிறப்பு என்னவென்றால்,
ஒரு தமிழன் இல்லை.
ஒரு முஸ்லிம் இல்லை.

ஒரு கிறிஸ்துவர் இல்லை, ஒரு பிற்படுத்தப்பட்டோர், ஒரு பட்டியலினத்தவர் மற்றும் ஒரு பழங்குடியினர் சமூகத்தை சேர்ந்தவர்கள் ஒருவரும் இல்லை.

ஆனால், *10,000000000000 பத்து லட்சம் கோடி வங்கி பணத்தை கொள் ளையடித்த இந்த 28 பேரில் 27 பேர் குஜராத் காரர்கள்,ஒருவர் மட்டும் விஜய் மல்லையா கர்நாடகா.

அப்ப தேச விரோதிகள் / துரோகிகள் யார்.?
இந்திய பொருளாதார வீழ்ச்சிக்கு யார் காரணம் ?
யார் பொறுப்பேற்பது.?
இதுவே மில்லியன் டாலர் கேள்வி ???

### தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில்

# சொல் புதிது கூட்டம்!

## முனைவர் ம. இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது !

சென்னை, மே 25-

சொல் புதிது கூட்டம் முனைவர் ம..இராசேந்திரன் தலைமையில் 21.05.2025 அன்று தமிழ் வளர்ச் சிக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேராசிரியர்கள் வ .ஜெயதேவன், சா.சரவணன், மு.முத்து வேலு, இராமசுவாமி, பாரதிபாலன், தி.ஞா.அருள்ஒளி, ஊடகவியலாளர்கள் மு.முருகேசன், திருப்பூர் கிருஷ் ணன், ராஜ் கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் உருவாக்கப்பட்ட சொற்களின் பட்டியல் வருமாறு:-

சொல் / பரிந்துரைகள்

Artificial Intelligence - செய்யறிவு

Bluetooth- ஊடலை

Breaking news- அதிர்வுச் செய்தி

Bullet train- மின் வேகத் தொடரி /இரயில்

Chatbot-உரையாடி

சொல்-பரிந்துரைகள்

Dating-காதலுணர் காலம்

Default -இயனிலை

Disc brake -வட்டுத் தடை

Ear phone - செவி பேசி

mayonnaise (Egg)- சுவைக் குழைவு

Electric chimney -மின் புகை போக்கி

Encrypted Data-குறியாக்கத் தரவு

Endgame- இறுதியாட்டம்

Encryption-குறியாக்கம்

Ethical hacking- நன்னோக்க முடக்கம்

Fibre cable-இழைவடம்

Firmware-நிலை பொருள்

Game changer-ஆட்ட மாற்றி, களம் மாற்றி

Garib Rath train-குறை கட்டண இரயில்/தொடரி

GIF file-இழப்பிலாப் பட மாற் றிக் கோப்பு(இ.ப. மா.)

Malware-கெடுபொருள்

# பவானிசாகர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு!

## 24,504 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி!

*சென்னை, மே.25-*

*ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணை யிலிருந்து, அரக்கன் கோட்டை மற்றும் தடப் பள்ளி வாய்க்கால்களி லுள்ள பாசன நிலங் களுக்கு, 2025-2026ஆம் ஆண்டு முதல் போக பாச னத்திற்கு, 26.05.2025 முதல் 22.09.2025 வரை 120 நாட்களுக்கு 8812.80 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட் டுள்ளது.*

*இதனால், ஈரோடு மாவட்டத்தில் கோபி செட்டிபாளையம், அந்தி யூர் மற்றும் பவானி வட் டத்திலுள்ள 24504 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று நீர்வளத் துறை தெரிவித்துள்ளது.*

## வாட்ஸ் அப்பில் வலம் வருகிறது!

